NOOLAHAM FOUNDATION
நூலக நிறுவனம்

# மன்னார் மாவட்ட ஆவணப்படுத்தல்




www.noolaham.foundation

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | மன்னார் மாவட்ட பிராந்திய  ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | மன்னார் மாவட்டம், இலங்கை. |
| செயற்றிட்ட காலம் | 12 மாதங்கள் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலகங்கள், நிறுவனங்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | |


## நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

மன்னார் பிராந்திய ஆவணகத்தில் மன்னார் மாவட்டத்தின் வரலாறு, அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தளங்கள், பெண்கள் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும் பண்டைய வரலாற்றினையும், அந்தப் பிரதேசத்தின் அரசியற் தனித்தன்மைகளையும், மன்னார் இலங்கையின் வேறு இராசதானிகளுடன் கொண்டிருந்த உறவுகளையும் ஆவணப்படுத்துவதே இச்செயற்றிட்டமாகும்.

## அறிமுகமும் பின்புலமும்




மன்னார் மாவட்டம் இலங்கையின் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் ஒன்றாகும். இலங்கைத்தீவின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் வடக்கே கிளிநொச்சி மாவட்டமும், வடகிழக்கே முல்லைத்தீவு மாவட்டமும் கிழக்கே வவுனியா மாவட்டமும், தென்கிழக்கே அனுராதபுர மாவட்டமும், தெற்கே புத்தளம் மாவட்டமும்

எல்லைகளாக அமைந்துள்ளன. மேற்கே மன்னார் குடாக்கடல் எல்லையாக அமைந்துள்ளது.கி.பி. 1650 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் படையெடுத்து வரும் வரை மன்னார் பிரதேசம் சகல வளங்களும் பொருந்தியதாக யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாக விளங்கியதாக வரலாறு கூறுகின்றது. கிமு 5ம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட விஜயன் உட்பட எழுநூறு பேர் இலங்கையில் கரையொதுங்கியதாக மகாவம்சம் கூறுகிறது. விஜயனுடன் ஒதுங்கிய எழுநூறு பேரில் உபதிஸ்ஸன் என்ற பிராமணனொருவன் இருந்ததாகவும் அவன் மன்னாரில் திருக்கேதீஸ்வரத்திற்கு சென்று வழிபட்டதாக மகாவசம்சத்தில் பதியப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பழம் பெருமைக்குச் சான்றாக மாதோட்டத் துறைமுகம் கொள்ளப்படுகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே இந்தியா உட்பட பிறநாட்டு வணிகர்கள் வந்து சென்ற துறைமுகமாக விளங்கிய பெருமை மாதோட்டத்திற்கு உள்ளது. தலைமன்னார், மன்னார், நானாட்டான், உப்புக்குளம் திருவானைக் கூடம், பாலம்பிட்டி, பேசாலை, சின்னக்கரிசல் சிறுநாவற்குளம், பறப்பாங்கண்டல், முள்ளிப்பள்ளம், எழுந்தூர், ஆலடி, கீரி, மாந்தை, உயிலங்குளம், தாராபுரம், வண்ணாமோட்டை, சின்னப் பண்டிவிரிச்சான், பூம்புகார், முள்ளிக்குளம், பெரிய பண்டிவிரிச்சான், இரணை இலுப்பைக் குளம், தட்சணா மருதமடு, ஆவரங்குளம், கல்மடு, முருங்கன், செம்மண்தீவு, கட்டுக்கரை, கட்டையடம்பன், விடத்தல் தீவு, ஆத்திமோட்டை, சீது விநாயகர் குளம் உட்பட பல இடங்களில் இந்துக் கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றுடன் முக்கியம் பெற்ற பல பள்ளிவாசல்களும், தேவாலயங்களும் அமைந்துள்ளன. அவை சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது.

## செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

நூலகம் நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றினையும், வாழ்க்கை முறைகளினையும், அவர்களின் வாழ்வுடன் பிணைந்த சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் விடயங்களையும் ஆவணப்படுத்தி வருகிறது. தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்கும் மன்னார் மாவட்டத்தினை ஆவணப்படுத்துவது இந்த வகையில் முக்கியத்துவம் மிக்கது. தமிழ் சமூகங்களின் வரலாற்று உருவாக்க முயற்சிகளிலும், வடபுலத் தமிழ் சமூகங்களின் வரலாற்று உருவாக்க முயற்சிகளிலும் ஒரு வகையான யாழ் மையவாதம் அவதானிக்கப்படுகிறது. மன்னார் பிராந்தியத்தினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சி இந்த யாழ் மையவாதத்தினைச் சவாலுக்கு உட்படுத்தும் ஒரு செயன்முறையாகவும் அமையும்.

காலனித்துவக் காலத்திலும் அதற்கு முன்னைய காலங்களிலும் மன்னார் மாவட்டத்தின் வரலாறு எப்படி இருந்தது, அங்கு யார் வாழ்ந்தார்கள், அவர்களது பழக்கவழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள் என்பன அதிக அளவிலே ஆவணப்படுத்தப்படவில்லை. அந்த வரலாற்றினைக் கண்டறிவது இந்தச் செயற்றிட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்கும். அத்துடன் மன்னார் மாவட்டத்தின் சனத்தொகை நாளடைவில் எவ்வாறு அதிகரித்தது, மாறியது போன்ற விடயங்களையும், அவற்றுக்கான பின்னணிக் காரணிகளையும், சனத்தொகைக்கும் பிராந்தியத்தின் கலை, கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்புகளை ஆணவப்படுத்துவதற்கு இந்தச் செயற்றிட்டம் வழிசெய்யும்.

அண்மைக் காலத்தில் அதிகரித்து வரும் பௌத்த மயமாக்கலினால் கலாசார ரீதியில் சவால்களுக்கு முகம்கொடுக்கும் மன்னார் மாவட்டத்தின் இடங்கள், தலங்களையும், அவற்றின் மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு அரசியல் முயற்சிகள் குறித்து இந்தச் செயற்றிட்டத்திலே கவனம் எடுக்கப்படும். கடல் வளத்தினைக் கொண்ட, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தின் இயற்கை வளங்கள், அழிவுகள் குறித்தும் இந்தச் செயற்றிட்டம் கவனம்

எடுக்கும். மன்னார் மாவட்டத்தின் நிலவும் சாதிய, பால்நிலை ரீதியிலான வேற்றுமைப்படுத்தல்கள், அவற்றினை சமூக நீதியின் அடிப்படையில் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் இடம்பெறும் எதிர்ப்பு முயற்சிகள் குறித்தும் இந்த ஆவணப்படுத்தல் கவனத்திலே கொள்ளும்.

இவ்வாறான விடயங்களின் மீது தனது கவனத்தினைக் குவிக்கும் இந்தச் செயற்றிட்டம், மன்னார் மாவட்டத்தினதும், அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினை அவற்றின் எல்லாச் சிக்கற் தன்மைகளுக்கு ஊடாகவும் வெளிப்படுத்த முயற்சிக்கும்.

## இலக்குகளும் நோக்கங்களும்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே மன்னார் மாவட்டமும், அங்கு வாழும் மக்களும் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டு வருதல்.

- மன்னார் மாவட்டத்தினதும் அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சியானது, அதனுடைய கால மற்றும் இட ரீதியிலான தன்மைகளின் அடிப்படையில் பரந்துபட்டது. இந்த முயற்சியினை ஒரு செயற்றிட்டத்தின் மூலமாக நிறைவுசெய்ய முடியாது. இந்த முதலாவது செயற்றிட்டம் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த கிராமங்களையும், அங்கு வாழ்ந்த மற்றும் தற்போது வாழுகின்ற மக்களினை ஆவணப்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

- மன்னார் மாவட்டத்துக்குரிய தனித்துவமான சமூகக் கட்டமைப்புக்கள், பண்பாட்டு அம்சங்கள், கலை வடிவங்கள், சடங்குகள், மரபுகள், இலக்கியங்களை வெளிக்கொண்டு வருதல்.

- மன்னார் மாவட்டத்தினுள் அவதானிக்கப்படும் பன்மைத்துவம், அசமத்துவங்கள், அதிகார மையங்கள், மக்களின் எதிர்ப்பு முயற்சிகள் பற்றி ஆவணங்கள் வாயிலாக வெளிப்படுத்தல். அத்துடன் மன்னார் பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணையவெளியில் உருவாக்குதல்.

## செயற்பாடுகள்

- செயற்திட்ட வடிவமைப்பு
  பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்ளை மீளாய்ந்து, செயற் திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைப்பொருளாக துல்லியமான செயற் திட்டம் அமையும்.

- சந்திப்புக்கள்/நிகழ்வுகள்/பயிற்சிப் பட்டறைகள்
  மன்னார் வாழ் மக்கள் ஊடான சந்திப்புக்கள், நிகழ்வுகள் ஊடாகவே மன்னார் தொடர்பான ஆவணப்படுத்தல் சாத்தியமாகிறது.

  மேலும்,மன்னார்மாவட்ட மக்களை தாங்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் ஈடுபட வைப்பதும், அதற்கான capacity கூட்டுவதும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடு தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகாப்பும் (Collection Development & Digital Preservation) மன்னார் மக்களால் வெளியிடப்பட்ட, மன்னார் தொடர்பான

தகவல் வளங்களை கண்டடைந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல். குறிப்பாக எத்தனை வளங்கள் இவ்வாறு கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணிப்பது சிக்கலாக உள்ளது. எமது முதற்கட்ட உரையாடல்களின் ஊடாக மேலும் தெளிவு கிடைக்கலாம்.

- நூல்கள்:
- பருவ இதழ்கள்:
- நிறுவன/நிகழ்வு/நிறைவு/சிறப்பு மலர்கள்:
- நினைவு மலர்கள்:
- துண்டுப் பிரசுரங்கள்
- குறுங்கால ஆவணங்கள்:
- ஆவணப் பதிவுகள்:
- ஏனைய எழுத்தாவணங்கள்:

- களப் பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)
  களப் பணிகள் ஊடாக உருவாக்கப்படும் வளங்கள் process செய்யப்பட்டு, பாதுகாப்பட்டு வெளியிடப்படும்.
  - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
  - ஒளிப்படங்கள் எடுத்தல்
  - காணொளிப் படப் பிடிப்பு
  - வாய்மொழி வரலாறுகள்

- தரவுத் தொகுப்புகள் (Data Sets)
  மேற்குறிப்பிடப்பட்ட secondary மற்றும் primary தரவுச் சேகரிப்புக்களின் ஊடாகப் பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக (structured data) ஆக மாற்றித் தொகுத்தல்.
  - மாவட்ட புள்ளிவிபரங்கள் (மக்கள் தொகையியல், கல்வி, நலம், பொருளாதாரம்)
  - இடங்கள்
  - இயற்கை வளங்கள்
  - தொல்லியல் களங்கள்
  - நபர்கள்
  - நிறுவனங்கள்

## எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- பணியாளர்களை தெரிவு செய்வதும், அவர்களுக்கான இடம், உபகரணங்களை வழங்குவதும் சவாலகாக அமையலாம். அதற்காக மன்னார் மாவட்டத்திலுள்ள சமூக நிறுவனங்களுடன் அல்லது ஆவணப்படுத்தல் சார்ந்து ஆர்வமுள்ளவர்களை அணுகி பணியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் காரியாலம் ஒன்றினை அமைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

- தற்போதைய அரசியல் சூழ்நிலை கள ஆவணப்படுத்தல், தகவல் தொகுப்பு போன்றவற்றை சிக்கல் ஆக்கலாம். மன்னார் மாவட்டத்தை ஆவணப்படுத்துவது என்பது ஒரு பெரும் பணி. முதற்கட்டமாகவே இந்தச் செயற்றிட்டம் நடைபெறும் என்பதை அனைத்து பங்குத்தாரர்களுக்கும் புரிந்து கொள்ள வைப்பதில் சவால்கள் இருக்கலாம். பங்குதாரர்களுக்கு இப்பிராந்திய ஆவணப்படுத்தலின் தேவைகளையும், முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள வைத்தல். மன்னார் மாவட்டத்திலுள்ள முக்கிய ஆளுமைகளுக்கூடாக

தொடர்புகளை ஏற்படுத்தி அதனூடாக ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை முன்னகர்த்த முடியும்.

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**